**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 317/2024**

**Deposition of P.W.** 11

Name : திரு. சாமுவேல்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**15.04.2026**

**Accused Present,**

<u>முதல் விசாரணை</u>–

நான் தமிழ்நாடு காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது தக்கலையில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 06.06.2024ம் தேதி நான் நிலைய பொறுப்பில் இருந்த போது ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையிலிருந்து போண் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல் படி அங்கு சென்று ராஜேந்திரன் என்பவரின் தகவல் படி அங்கு சென்று காயம்பட்ட நபர் அவசர சிகிச்சை பிரிவில் இருந்த படியால் அவரது உறவினரான எஸ்ரா மகன் விஜு என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையம் வந்து 07.00 மணிக்கு நிலைய குற்ற எண். 93/2024 பிரிவுகள் 294(பி), 307, 506(2) இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7. அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.



**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

05.06.2024ம் தேதி மாலை ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையிலிருந்து தகவல் எதுவும் பெறப்படவில்லை. 06.06.2024ம் தேதி அதிகாலை 02.00 மணிக்கு தகவல் கிடைத்ததாக எனது விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். காயம்பட்ட நபர் நான் பார்த்த போது சுயநினைவுடன் இல்லை. முதல் தகவல் அறிக்கை 07.06.2024ம் தேதி இரவு 10.15 மணிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்னது போல், சொன்ன நேரத்தில் எவ்வித வாக்குமூலமும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.